Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

நல்லூர் கிளை நூலகம்
மாநகரசபை
யாழ்ப்பாணம்

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 17 (02-12-1992) புதன்கிழமை ஒலி 288

## தபால் அதிபர் உறுதிப்படுத்தும் அடையாளத்தை ஏற்றுக் கொள்க

க. பொ. த. சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில், அஞ்சல் திணைக்கள அடையாள அட்டை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு புகைப்படங்களில் தபால் அதிபர்கள் பெயர் அடையாளத்தை உறுதிப்படுத்துவதை ஏற்றுக் கொள்ளுமாறு கல்வித்திணைக்களத்தையும், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்களையும் வடபிராந்திய தபால்மா அதிபர் எஸ். எம் சேதுகாவலர் கடிதமூலம் கேட்டுக் கொண்டுள்ளார். இது தொடர்பாக கல்வித்திணைக்களத்திற்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் மேலும் பரீட்சார்த்திகளின் நலனை முன்னிட்டு தபால் திணைக்களத்தால் வழங்கப்படும் ஆள (4 ஆம் பக்கம் பார்க்க)

# இரத்தினபுரியில்பாரிய தேடுதல் வேட்டை

## தேயிலைத் தோட்டங்களில் புலிகள் தங்கியுள்ளனராம்

[கொழும்பு]

இரத்தினபுரி தேயிலை, றப்பர் தோட்டங்களில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரைத் தேடி பாரிய தேடுதல் வேட்டையில் சிறிலங்கா பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். கொழும்பில் ஊடுருவ முற்பட்ட விடுதலைப் புலிகள் சிலர் இங்கு உள்ளனர் எனக் கிடைத்த புலனாய்வு அறிக்கைகளைக் கொண்டே இத் தேடுதல் இடம் பெறுவதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தின் பல பகுதிகளும் பொலிசாரால் சுற்றி வளைக்கப்பட்டு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இச் சோதனைகளுக்கு என விசேட பொலிஸ் பிரிவொன்று கொழும்பில் இருந்து இரத்தினபுரிக்கு சென்றுள்ளதாகவும் அவ் அதிகாரி தெரிவித்தார்.

அப் பகுதியில் தேயிலைத் தோட்ட, றப்பர்த் தோட்டங்களில் விடுதலைப் புலிகள் ஊடுருவி இருப்பதாக கிடைத்த தகவல்களை தொடர்ந்து மேற்படி சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாகவும், தோட்டத்தில் உள்ள வீடுகள், கடைகள், தொழில் நிறுவனங்கள் போன்றவை சுற்றி வளைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பிற்குள் பெருமளவு புலிகள் ஊடுருவியிருக்கலாம் என சிறிலங்கா பொலிசார் சந்தேகிக்கின்றனர் எனவும் இவர்கள் தற்பொழுது தலைமறைவாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மாத்தளை நகரப் பகுதியில் இருபத்தேழு தமிழர் கைது

(மாத்தளை)

மாத்தளை நகரப்பகுதிகளில் பொலிசார் நடாத்திய திடீர் தேடுதல் வேட்டையின்போது இரு பெண்கள் உட்பட சுமார் 27 தமிழர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

மாத்தளை நகரப் பகுதியில் தமிழர்கள் அதிகமாக வாழும் பகுதிகளான களுதாவளை, வட்டவீதி ஆகியபகுதிகளுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் வந்த பொலிஸ் குழுக்கள் அங்

தடுத்துவைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

## அநுராதபுரம் பகுதியில் மீண்டும் மர்ம கொலைப்படை

அநுராதபுரம், மதவாச்சிப் பகுதியில் மீண்டும் மர்மக் கொலைகள் நிகழ்ந்துள்ளன. கடந்த வாரம் கல்னேவா பகுதியிலும், மதவாச்சியில் ரட்மலகவேவா பகுதியிலும் மட்டும்

சம்பவங்களைத் தொடர்ந்து மேற்படி பகுதிகளில் ஒரு ''கொலைப்படை'' மர்மமான முறையில் இயங்கி வருவதாக பொலிசார் சந்தேகிக்கின்றனர். இக்கொலைகளுக்கு

வீரச்சாவு



கப்டன் முகுந்தன் (கிருமானி)

நேற்று முன்தினம் யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தொன்றில் கப்டன் முகுந்தன் -கிருமானி (பிரான்சிஸ் றொபேட் வின்சன் சென் ஜேம்ஸ் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்) என்ற விடுதலைப் புலிகள் போராளி வீரச்சாவு அடைந்தார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றனர்.

## மாவீரர் குறிப்பேடு

ஈழநாதத்தின் இணைப்பாக வெளிவந்த மாவீரர் குறிப்பேட்டின் இறுதிப்பகுதி இன்றைய ஈழநாதத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. குறிப்பேட்டில் ஏதாவது தவறுகள் இடம்பெற்றிருப்பின் மாவீரர் பணிமனையுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## செய்முறைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. உயர்தர 1992-ம் ஆண்டின் ஒகஸ்ட் மாதத்திற்குரிய கர்நாடக சங்கீத பரத

# கொழும்பு பாதுகாப்பு; படையினர் இழுபறி

## பொறுப்பைத் தட்டிக்கழிக்க இராணுவம்-பொலிஸ் முயற்சி

(கொழும்பு)

கொழும்பு நகரம் யாரின் பாதுகாப்பில் இருக்கிறது என்பது குறித்து குழப்பம் நிலவுவதாகச்செய்திகள் தெரிவிக்கின்றன. கொழும்பு விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்பில் இருப்பதாகப் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ள அதேவேளை, விசேட அதிரடிப் படையினர் கொழும்பின் பாதுகாப்பிற்கு அமர்த்தப்படவில்லை என இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து பத்திரிகையாளர் மாநாட்டில் கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த கூட்டுப்படை தலைமை செயலக பேச்சாளர் கேணல் சரத் முனசிங்க கிழக்கு மாகாணத்திலேயே பெரும் பகுதி விசேட அதிரடிப்படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர் எனவும், கொழும்பில் சில முக்கியஸ்தர்களின் பாதுகாப்பிற்கு மட்டும் சிறு எண்ணிக்கையானோர் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்ததுடன் கொழும்பின் பாதுகாப்பு பொலிசாரின் பொறுப்பில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதனை உடனிருந்த அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரம சிங்கவும் ஊர்ஜிதம் செய்தார்.

இந் நிலையில் கொழும்பின் பாதுகாப்பு யாரிடம் என்பது குறித்து குழப்பம் நிலவுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## புலிகளுக்கு உதவினார்களாம் மூன்று கோடீஸ்வரர் கைதாகலாம்

(கொழும்பு)

கொழும்பு செட்டித் தெருப் பகுதியைச் சேர்ந்த மூன்று கோடீஸ்வர வர்த்தகர்கள் விடுதலைப் புலிகளுக்கு உதவினார்கள் என்ற காரணத்திற்காக மிக விரைவில் கைது செய்யப்படலாம் என்று புல

திருவனந்தபுரம், சென்னை, பாரிஸ் போன்ற இடங்களில் முகவர்களும், கிளைநிறுவனங்களும் இருக்கின்றது என்றும், இவர்கள் போதைப் பொருள் கடத்தல், கள்ளக் கடத்தல் என்பவற்றிலும் ஈடுபட்டிருந்தனர் என்றும், பொலிசார்

கள் கொழும்பிலுள்ள உல்லாசப் பணிகள் விடுதிகளில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள், பிரமுகர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தனர் என்றும், அதற்குரிய செல

சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இச் சோதனைகளுக்கு என விசேட பொலிஸ்

...காரி தெரிவித்தார்.

அப் பகுதியில் தேயிலைத் தோட்ட, றப்பர்த் தோட்டங்களில் விடுதலைப் புலிகள் ஊடுருவி இருப்பதாக கிடை

தோட்டத்தில் உள்ள வீடுகள், கடைகள், தொழில் நிறுவனங்கள் போன்றவை சுற்றி வளைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பிற்குள் பெருமளவு புலிகள் ஊடுருவியிருக்கலாம் என சிறிலங்கா பொலிசார் சந்தேகிக்கின்றனர் எனவும் இவர்கள் தற்பொழுது தலைமறைவாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மாத்தளை நகரப் பகுதியில் இருபத்தேழு தமிழர் கைது

(மாத்தளை)

மாத்தளை நகரப்பகுதிகளில் பொலிசார் நடாத்திய திடீர் தேடுதல் வேட்டையின்போது இரு பெண்கள் உட்பட சுமார் 27 தமிழர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

மாத்தளை நகரப் பகுதியில் தமிழர்கள் அதிகமாக வாழும் பகுதிகளான களுதாவளை, வட்டவிதி ஆகியபகுதிகளுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் வந்த பொலிஸ் குழுக்கள் அங்குள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று சோதனை நடாத்தியது. சோதனையின் இறுதியில் திருமண வைபவம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக இப்பகுதிக்குவந்து தங்கியிருந்த சுமார் பத்துப்பேர் உட்பட 27 பேரையும் பொலிசார் கைது செய்து சென்றுள்ளனர்.

இவர்கள் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

## அநுராதபுரம் பகுதியில் மீண்டும் மர்ம கொலைப்படை

அநுராதபுரம், மதவாச்சிப் பகுதியில் மீண்டும் மர்மக் கொலைகள் நிகழ்ந்துள்ளன. கடந்த வாரம் கனேவா பகுதியிலும், மதவாச்சியில் ரட்மலகவேவா பகுதியிலும் மட்டும் மொத்தம் மூன்று சடலங்கள் எரியுண்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறன. இச் சம்பவங்களைத் தொடர்ந்து மேற்படி பகுதிகளில் ஒரு ''கொலைப்படை'' மர்மமான முறையில் இயங்கி வருவதாக பொலிசார் சந்தேகிக்கின்றனர். இக்கொலைகளுக்கு காரணமானவர்கள் எவரும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

## மாவீரர் குறிப்பேடு

ஈழநாதத்தின் இணைப்பாக வெளிவந்த மாவீரர் குறிப்பேட்டின் இறுதிப்பகுதி இன்றைய ஈழநாதத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. குறிப்பேட்டில் ஏதாவது தவறுகள் இடம்பெற்றிருப்பின் மாவீரர் பணிமனையுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## செய்முறைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. உயர்தர 1992-ம் ஆண்டின் ஒகஸ்ட் மாதத்திற்குரிய கர்நாடக சங்கீத பரத நாட்டிய செய்முறைப் பரீட்சைகள் இன்று முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறுகின்றது.

இச்செய்முறைப்பரீட்சைக்கு பரீட்சார்த்திகள் உரிய காலத்தில் வந்து பங்குபற்றும்படி யாழ். கல்வித் திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது (பா)

...கூட்டுப்படை தலைமை செயலக பேச்சாளர் கேணல் சரத் முனசிங்க கிழக்கு மாகாணத்திலேயே பெரும் பகுதி விசேட அதிரடிப்படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர் எனவும், கொழு

...படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்ததுடன் கொழும்பின் பாதுகாப்பு பொலிசாரின் பொறுப்பில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதனை உடனிருந்த அமைச்

...செய்தார்.

இந் நிலையில் கொழும்பின் பாதுகாப்பு யாரிடம் என்பது குறித்து குழப்பம் நிலவுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# புலிகளுக்கு உதவினார்களாம் மூன்று கோடீஸ்வரர் கைதாகலாம்

(கொழும்பு)

கொழும்பு செட்டித் தெருப் பகுதியைச் சேர்ந்த மூன்று கோடீஸ்வர வர்த்தகர்கள் விடுதலைப் புலிகளுக்கு உதவினார்கள் என்ற காரணத்திற்காக மிக விரைவில் கைது செய்யப்படலாம் என்று புலனாய்வு துறை அதிகாரிகளும், பொலிசாரும் கூறியுள்ளனர்.

இந்த வர்த்தகர்கள் ஆயுதங்கள். தொலைத் தொடர்பு சாதனங்கள், தங்கம் போன்றவற்றை விடுதலைப்புலிகளுக்கு பெற்றுக் கொடுத்து வந்தனர் என்றும், இவர்களுக்கு கொங்கொங், கொழும்பு, சிங்கப்பூர் திருவனந்தபுரம், சென்னை, பாரிஸ் போன்ற இடங்களில் முகவர்களும், கிளைநிறுவனங்களும் இருக்கின்றது என்றும், இவர்கள் போதைப் பொருள் கடத்தல், கள்ளக் கடத்தல் என்பவற்றிலும் ஈடுபட்டிருந்தனர் என்றும், பொலிசார் கூறியுள்ளனர்.

இத்துடன் இவ் வர்த்தகர்கள் கொழும்பிலுள்ள உல்லாச பணிகள் விடுதிகளில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள், பிரமுகர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தனர் என்றும், அதற்குரிய செலவினங்களை இவர்களே செலுத்தியிருந்தனர் என்றும் கூறப்படுகின்றது.

கொழும்பு நகர

## பாடசாலை ஆய்வு கூடத்தில் சயனைட் கொள்ளை

(கொழும்பு)

கொழும்பு வடக்கில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் இருந்து சுமார் 14,000 ரூபா பெறுமதியான சயனைட் கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது எனக் கூறப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்ற இக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக பொலிசார் தீவிர விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். மேற்படி பாடசால ஆய்வு கூடத்தில் பல்வேறு பெறுமதி வாய்ந்த பொருள்கள் இருந்த போதிலும் சயனைட் மட்டுமே கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது என தெரியவருகிறது

# ஜெரி. டி. சில்வாவின் பதவிக்காலம் நீடிப்பு

இராணுவத்தளபதிகளின் வரிசையில் இரண்டாம் இடத்தில் இருக்கும் மேஜர்ஜெனரல் ஜெரி. டி சில்வாவின் பதவிக் காலம் மேலும் ஒரு வருடம் நீடிக்கப்பட்டுள்ளது இதற்கான அறிவித்தலை சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா அண்மையில் வெளியிட்டுள்ளார். முன்னதாக இந்த வருடம் 31-ம் திகதியளவில் இவர் ஓய்வு பெற விருந்தது தெரிந்ததே.

# வலிகாமம் பகுதிகளில் பரவலான எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம்பகுதிகளில் நிலை கொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் வலிகாமம் மேற்கு, கிழக்கு, தெற்கு ஆகிய பகுதிகளின் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி ஷெல் மற்றும் 50 கலிபர் தாக்குதல்களை மேற் கொண்டுள்ளனர்.

இவ்வாறு நேற்று முன்தினம் நள்ளிரவில் இருந்து நேற்று அதிகாலை வரை இடையிடையே இராணுவத்தினர் தாக்குதல்களை நிகழ்த்திய

[4 ஆம் பக்கம் பார்க்க]

# தேசியபுலனாய்வு பணியகம் சி.ஐ.ஏ.போன்றுசெயற்படும்

(கொழும்பு)

தேசிய புலனாய்வு பணியகம் வெகுவிரைவில் பாதுகாப்பு படைகளின் ஒரு புலனாய்வுக் கரம் போல செயற்படவுள்ளது அதாவது ஐக்கிய அமெரிக்காவின் சி, ஐ ஏ. மற்றும்

[4 ஆம் பக்கம் பார்க்க],

# விடுதிகளில் தங்கியிருப்போர் பெயர்களை பதிவுசெய்ய பணிப்பு

(கொழும்பு)

ஐந்து நட்சத்திர ஹோட்டலகள் உட்பட கொழும்பில் விடுதிகளில் தங்கியுள்ள தமிழர்கள் தொடர்பான முழு விபரங்களையும் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு வழங்க வேண்டும் என்றும் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

நாளாந்தம் விடுதிகளில் தங்கும் தமிழர்களின் விபரங்களை அறிவிக்காத விடுதிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இரண்டு பிரதிகள் கொண்டதாக இந்த விபரங்கள் அனுப்பப்பட வேண்டும் என்றும், அறிவிக்கப்பட்ட பெயர் விபரம் உள்ளவர்களைத் தவிர வேறு எவரையும் விடுதிகளில் தங்க அனுமதிக்கக் கூடாது எனவும் பொலிசார் கூறியுள்ளனர்.

கொழும்பு நகரப்பகுதியில்

## பதிவுசெய்து தங்கியிருந்த 15 தமிழ்யுவதிகள் கைது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் பதினைந்துக்கும் மேற்பட்ட தமிழ்யுவதிகள் கிருலப்பனை, கலகிசை பகுதிகளில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மீது விசாரணை தற்போது நடைபெறுவதாகக் கூறப்படுகிறது.

பலாலி, விசாவிளான், வல்வெட்டித்துறை, வட்டுக்கோட்டை, கொடிகாமம், கல்முனைப் பகுதிகளைச் சேர்ந்த இவர்கள், கொழும்பின் பல பகுதிகளிலும் தங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளில் சீவியம் நடத்தக் கஷ்டமாக இருப்பதால் வெளிநாடு போவதற்காகக் காத்திருந்ததாகக் கூறிய இவர்களின்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கிளாலி கடற்பரப்பில் 3 படகுகள் மூழ்கடிப்பாம்

– கூட்டுப்படை அறிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணக் கடல் வாவிப் பகுதியில் மூன்று படகுகளை சிறிலங்கா கடற்படையினர் தாக்கி அழித்திருப்பதாக சிறிலங்கா கூட்டுப்படைகளின் அலுவலகம் அறிவித்திருக்கிறது.

இரு வெவ்வேறு சம்பவங்களில் இம் மூன்று படகுகளும் மூழ்கடிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. முதலாவது சம்பவத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒருபடகு மூழ்கடிக்கப்பட்டிருக்கிறது எனவும் வேறொரு சம்பவத்தில் இரு படகுகள் தாக்கப்பட்டிருக்கிறது எனவும் மேலும் அது அறிவித்தது.

இப்படகிலிருந்து சுமார் இருபது மூடை அரிசி சீனி

[4 ஆம் பக்கம் பார்க்க]

# தீர்வுத்திட்டத்தை முன்வைக்க சிங்களகட்சிகளிடம் வற்புறுத்து

## சந்தர்ப்பவாத அரசியலைக் கைவிடவேண்டுமாம்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டிய பொறுப்பிலிருந்து ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியும, எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் விலகிக் கொள்ள முடியாது என்று சண்டே ஐலண்ட் ஆசிரிய தலையங்கத்தில குறிப்பிட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடுகையில், தேசிய நலனை முன்னிட்டு அரசாங்கமும் சரி, எதிர்க்கட்சியும் சரி நேரத்தை வீண்விரயம் செய்யாமல் தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க வேண்டும். அரசியல் சந்தர்ப்பவாத அடிப்படையில் செல்வா - பண்டா உடன்படிக்கை. டட்லி-செல்வா உடன்படிக்கை என்பவற்றை செயல் இழக்கச்செய்வதில் இந்த இரு கட்சிகளும் பரஸ்பரம் குற்றச் சாட்டுக்களைச் சுமக்கவேண்டும்.

இனப்பிரச்சினை பூதாகரமானதாகவளர்வதற்கு மூன்று முறை ஆட்சிபீடமேறியதும், இனியும் ஆட்சியைப் பிடிக்கலாம் என்று நம்புவதுமான ஐக்கிய தேசியக்கட்சியும், முக்கிய எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் பெருமளவில் காரணமாகவுள்ளன. இப்பிரச்சினையில் ஐ தே. கவும். சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஒரு இணக்கத்திற்கு வருவதே ஒரு முக்கிய திருப்புமுனையாக இருக்கும்.

எனவே அரசியல் லாபங்கள் பற்றியும், அரசியல் பிம்பங்கள் பற்றியும் கவலைப்படுவதில் நேரத்தைச் செலவிடாமல் தீர்வை முன்வைக்கத் துணிய வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

# காவலரண்களின் பாதுகாப்பிற்கு மேலதிக படை அனுப்ப யோசனை

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் எல்லைப்புற கிராமங்களிலிருக்கும் இராணுவ துருப்பினரை மீளப்பெறறு இவர்களை இராணுவ முன்னணிக் காவலரண்களைப் பலப்படுத்தப் பயன்படுத்துவது தொடர்பாக இராணுவ வட்டாரங்களில் ஆராயப்பட்டு வருவதாகத் தெரிய வருகின்றது.

முன்னணிக் காவலரண்கள் மீதான புலிகளின் தாக்குதல்கள் அண்மைக் காலங்களில் அதிகரித்து வருவதையடுத்தும் இதனால் இழப்புக்கள் அதிகரிப்பதையடுத்தும் இவ் விதம் ஆராயப்படுவதாக தெரிகிறது.

பூநகரி, கட்டைக்காடு, அடம்பன், நொச்சிமோட்டை, பலாலி ஆகிய இடங்களிலுள்ள முன்னணிக் காவலரண்கள் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகியதை அடுத்து முன்னணிக்காவலரண்களின் பாதுகாப்பு குறித்து மீளாய்வு செய்வது அவசியம் என இராணுவ வட்டாரங்கள் கருதுகின்றன.

எல்லைப் புற கிராமங்களின் பாதுகாப்புக்கென பெருமளவு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: பவ் நிலையம், சாவகச்சேரி

(சி-5510)

### மாதிரி வினாத்தாள்கள்

O/L வகுப்புகளிற்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம் (சைவம், றோ. க./கிறிஸ்தவம்), வர்த்தகம், விவசாயம், மனைப் பொருளியல், சித்திரம், சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் (விடைகளுடன்) மலிவு விலையில் விற்பனையாகின்றன. Bond Institute, 582 Stanley Road, Jaffna.

(சி-5450)

### தவறிவிட்டது

கடந்த 21-ம் திகதி கட்டுடையில் நடைபெற்ற மினி பஸ் விபத்தின் போது அவ்விடத்தில் கைக்கடிகாரம், ஒன்றும் ஒரு தொகைப்பணமும் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

(சி-5517)

### விற்பனைக்கு

புத்தகராக்கி, மேசைகள் லாச்சியுடன், கண்ணாடி ஹோல் சோக்கேஸ், றோனியோ இயந்திரம், வேப்பம் பலகையிலான உடுப்பு வைக்கும் அலுமாரி. தொடர்பு; இல. 65 (185) பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(3225,)


## தனக்குத்தானே தீமூட்டி தற்கொலை

தனக்குத்தானே தீமூட்டி தற்கொலை செய்துகொண்ட இளந்தாயின் மரணம் வவுனியாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வவுனியா வைரவர் புளியங்குளப் பகுதியைச் சேர்ந்த சரவணமுத்து மல்லிகாதேவி (வயது-35) என்பவர், கணவர், மற்றும் பிள்ளைகள் ஆழ்ந்த நித்திரையில் இருந்த சமயம், தன் உடம்பில் பெற்றோலை ஊற்றி தற்கொலை செய்துகொண்டார்.

கணவரோடு ஏற்பட்ட பிணக்குக் காரணமாகவே இவர் தற்கொலை செய்துகொண்டார் என்று தெரிவிக்கப்படுகின்ற போதிலும், இத் தற்கொலைக்குரிய சரியான காரணம் தெரியவரவில்லை.

சில தினங்களுக்கு முன்னர் நிகழ்ந்த இச் சம்பவம் வவுனியா நகரையே பரபரப்பிற்குள்ளாக்கியது என்று தெரிவிக்கப்பட்டது. (தி)


### இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
### யாழ் கிளைத் தலைமையலுவலகம்
### புளோறன்ஸ் நைற்றிங்கேல் பதக்கம்

போர்க்காலத்திலோ அல்லது சாதாரண காலத்திலோ நோயாளர்களை மகா உன்னத முறையில் பராமரித்துக் காப்பாற்றியுள்ள ஆண்/பெண்/தாதி/தொண்டர் ஒருவரைக் கௌரவித்தளிக்கப்படும் இப்பதக்கத்தைப் பெறத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்விண்ணப்பங்கள் போதிய ஆதாரங்களுடன் விண்ணப்பதாரிகள் வதியும் உதவி அரசாங்க செஞ்சிலுவைப் பிரிவுகளின் செயற்குழுவுக்கு 05-12-92க்கு முன் அனுப்பப்படல் வேண்டும். பிரிவுகள் கிளைத் தலைமையகத்திற்கு இவற்றைத் தகுதியானால் 10-12-92க்கு முன் அனுப்பி வைக்கும். யாழ். மாவட்டத்தில் தகுதியானவரை கிளை நிர்வாகசபை தெரிவு செய்யும்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்,
30-11-1992.

கௌரவ செயலாளர்

(சி-5515)


## 6 ஆம் மாத நினைவஞ்சலியும அந்தியேட்டி அழைப்பும்



# பனைவளப் பயன்பாடு

தாலமும் தமிழும் தழுவியே வாழும் (தால விருட்சம்- பனைமரம்) தமிழர் பிரதேசமான தமிழகத்திலும், தமிழீழத்திலும் பனைப்பயிர் தமிழ் மக்களோடு இணைந்து வளர்கின்றது. தமிழ் மக்களின் உணவுப் பழக்கங்களில் பனை உணவு கணிசமான பங்கினை வகிக்கின்றது. அவர்களது பாவனைப் பொருள்களில் பனம் பொருள்கள் பெரும் பங்கினைக் கொண்டுள்ளன.

பனை இருந்தாலும் பல வருடம், இறந்தாலும் பல வருடம்.

எந்த வகையான தட்ப வெப்ப சூழ்நிலையையும் தாக்குப் பிடித்து தளராது வளரக் கூடியது பனைமரம். சலுகை அடிப்படையிலான எந்தவித பயிர்ப் பரிபாலனமும் இதற்குத் தேவையில்லை. செயற்கையான அழிவைத் தடுத்து நிறுத்தினால் போதும், பனை தன்னைத்தானே காப்பாற்றி வளர்ந்து பயன் கொடுக்கும். வேறெந்த மரத்திற்கும் இல்லாத தனிச்சிறப்பு பனைக்கு உண்டு.

மனித வாழ்வோடு பனை மரம் பின்னிப் பிணைந்துள்ளது. மனிதரைப் போல நூறு ஆண்டு வாழக்கூடியது. பனை இரண்டு வயது முதல் பதினாறு வயதிற்குள் பருவம் அடையக் கூடியது, தாய்ப்பாலைப் போன்ற ஊட்டச்சத்துள்ள பதநீரைத் தரவல்லது. தன் உடம்பில் உள்ள ஒவ்வொரு பாகத்தையும் தந்து மக்களுக்கு உதவுகின்றது.

இளமையில் எழுக ஏட்டிலிருந்து இறுதியில் எரிக்க விறகு வரை. இடையிலே உண்ண உணவும், உறங்கப்பாயும் உறைய வீடும் இப்படி இன்னும் பல பயன்பாடுகளோடு பனையும் மனித வாழ்வும் இணைந்துள்ளது.

எனவே தான் தமிழகத்தின் மாநிலமரமாக பனை மரத்தை தமிழக அரசு பிரகடனப்படுத்தியது. பனை மரத்துக்கு கொடுத்துள்ள முக்கியத்துவத்தை இதன் மூலம் உணரலாம்.

தமிழீழ நிலப்பரப்பில் சுமார் ஒரு கோடியே பத்து இலட்சம் எண்ணிக்கை உடைய பனை மரங்கள் உள்ளன, இவற்றில் சுமார் இரண்டு இலட்சம் மரங்கள் வரை தொழில் ரீதியாக பயன்படுத்தப்படுகின்றன.

பனை சார் தொழில் வருவாய் மூலம் பல்லாயிரம் குடும்பங்கள் வாழ்கின்றன. பல ஆயிரம் மக்கள் தொழில் வாய்ப்பு பெற்றுள்ளார்கள்,

குடிசைத் தொழில் தேடித் தரும் சிறந்த மூலவளங்களுள் காத்திரமானது பனை வளம், தமிழன் கலையும் பண்பாடும் மிளிரச் செய்யும் தொழில்களுள் பனை வளக் குடிசைத் தொழிலும் ஒன்றாகும். அதிக மூலப்பொருள் அளிக்கக்கூடிய இயற்கை வளம் பனை வளமாகும்.

அடிவேரிலிருந்து நுனிப்பாகம் வரை பயன்படுகின்றது. வருட ஆரம்பத்தில் பதநீர் பின்பு நுங்கு, அதன் பின் பனம்பழம், அதைத் தொடர்ந்து கிழங்கு. திரும்பப் பதநீர் இப்படியே வருடம் பூராவும் தொடர்ச்சியாக உணவுப் பொருள் தருகின்றன, தன்னை அண்டியவர்களை வாழவைக்கின்றது

பனை வளத்திலிருந்து 800க்கும் அதிகமான உற்பத்திப் பொருள்கள் உருவாக்க முடியும் என்பது ஆய்வாளர்களின் கூற்றாகும்.

பனை பலவித பயன்பாடுகளை ஈட்டித் தருவதனால் கற்பகதரு எனச் சொல்லப்படுகின்றது.

### பனையிலிருந்து

ஓலை, மட்டை, நார், ஈர்க்கு, பன்னாடை, துப்பு, பதநீர், கள்ளு, நுங்கு, பனம்பழம், பனம் விதை, பனங் கிழங்கு, பூரான், ஊமல், மரம், போன்ற மூல உற்பத்திகள் பெறப்படுகின்றன. இந்த மூல உற்பத்திப் பொருள்களிலிருந்து:

பெட்டி, விசிறி, ஊமல்கரி, கடகம், சுளகு, பனாட்டு, பட்டை, கூடை ஜாம், குட்டான், இடியப்பத்தட்டு, பழச்சாறுவகை, பாய் நீத்துப்பெட்டி, ஒடியல், கூரை, திருகணை, புழுக்கொடியல் விலங்குணவு உறி, பிட்டு, பசளை பிறஷ் கூழ் அலங்காரப் பொருள்கள், தடைப்பம், பாணிப்பனாட்டு பை. மதுசாரம் இனிப்புவகை, வேலி வெல்லம், எரிபொருள், கயிறு, சீனி மரப்பொருள், தொப்பி கல்லாக்காரம், பனம் பாணி, போன்ற இன்னும் பலநூறு பகுதிப் பயன்பாடுகளைப் பெறக் கூடியதாய் உள்ளது.

கேட்டதெல்லாம் கொடுக்கும் காமதேனுவைப் போன்ற மனிதன் கற்பனைக்கும், ஆராய்ச்சிக்கும், புதிய கண்டுபிடிப்புக்களுக்கும் ஈடுகொடுக்கும் வகையில் மூலப்பொருள்களை அள்ளிச் சொரிந்து கொண்டிருக்கின்றது. இந்தக் கற்பகதரு பனையை பல்மூல உபகாரி எனின் அது பொய்யாகா.

இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் உணவுத் தேவைக்கு உதவுகிறது எரிபொருளாக விறகாக) பயன்படுகின்றன. ஏராளமானோருக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்கிறது. தமிழீழத்துக்கு பெரும் செல்வத்தை ஈட்டிக்கொடுக்கின்றது உள்ளூர் உற்பத்திக்கு பெரும் மூலவளமாகத் திகழ்கின்றது எனவே இத் தகைய,

"பனையைக் காப்போம்' பயனைப் பெறுவோம்"

நன்றி: தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம்

## ஆசிரியர் கலாசாலை இறுதிப் பரீட்சைகள்

கோப்பாய், பலாலி ஆசிரியர் கலாசாலைகளில் இறுதிப் பரீட்சைகள் இந்த மாதம் 18ஆம் திகதி முதல் 23 ஆம் திகதிவரை நடைபெறும்.


### புதிய உயர் கல்லூரி
### ஆரியகுளம் சந்தி, யாழ்.

# O/L

## ஆண்டு: 10, 9

புதிய பிரிவுகள்
ஆரம்பம் :
**5 - 12 - 92**
(சனி 3.00 மணி)

| | |
|---|---|
| விஞ்ஞானம் | - தயாநிதி |
| கணிதம் | - கதிர் |
| ச. கல்வி | - கியூபேட் |
| தமிழ் | - பிரதீபன் |
| வர்த்தகம் | - ஸ்ரீ |
| ஆங்கிலம் | - சஙா |

(சி-5502)



### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்

1. பயிராக்கவியல்/விவசாய உயிரியல் / விவசாய இரசாயனவியல் / விவசாயப் பொறியியல் /மிருக விஞ்ஞானப் பேராசிரியர்.
2. விவசாய உயிரியல் / விவசாய இரசாயனவியல்/ விவசாயப் பொறியியல்/

தற்காலிக செய்முறை காட்டுநர்:

ரூபா 3,250/- மாதமொன்றுக்கு (நிலையானது)

துறைத் தலைவரினாலும், பீடாதிபதியினாலும் ஓராண்டு காலத் திருப்திகரமான சேவையை நிறைவு செய்துள்ளாரென உறுதிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒருவருக்கு விரிவுரையாளர் (தகுதிகாண் எனப் பதவிப் பெயர் அளிக்க முடியும் என்பதுடன் துணைவேந்தரால் மாதமொன்றுக்கு 4500-10X200-6500/- சம்பள அளவுத்திட்டத்திலும் வைக்கப்படுவர்.

பேராசிரியர் பதவிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 1993-01-31 ஆகும். ஏனைய பதவிகளுக்கு முடிவுத் திகதி 1992-12-31 ஆகும்.


## நினைவு கூருகின்றோம் ... 1992-12-02

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் ஜான் ஓயாப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட

★ றாஜி (லோறன்ஸ் ஆரோக்கியநாதன் - மட்டக்களப்பு)

★ சீலன் (முன்னம்போடிவெட்டை- திருக்கோணமலை)

★ மதுரவால் (நகுலேஸ்வரன் - திருக்கோணமலை)

வவுனியா ஜோசேப் முகாமில் வைத்து சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 36 தமிழ் இளைஞர்கள் - செட்டிகுளம் சேமமடுப் பகுதிகளில் சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன 108 தமிழர்கள்,

சுன்னாகத்தில், சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

நாதம் அலுவலகத்தில் ஒப் படைக்கவும். (சி-5517)

## விற்பனைக்கு

புத்தகராக்கி, மேசைகள் லாச்சியுடன், கண்ணாடி ஹோல் சோக்கேஸ், றோனியோ இயந்திரம், வேப்பம் பலகையிலான உடுப்பு வைக்கும் அலுமாரி. தொடர்பு; இல. 65 (185) பிரதான வீதி, யாழ்ப்பாணம். (3225,)

## UNIVERSITY OF JAFFNA

## TENDER NOTICE

Sealed tenders are invited from suitable contractors to carry out termite proofing for the ground floors of part of the following Buildings.

1. Vithiananthan Library
2. Medical Facuity Building

Tender forms can be obtained from works Engineer, University of Jaffna on or before 1992-12-11 on producing a receipt fromBursar, University of Jaffna for the payment of Non - refundable Tender fee of Rs. 250/-

Contractors should produce Copies of their business registration and also documents to show the successful Completion of last two jobs to proof the -ir Capablity in termite proofing / pest control.

Any further information can be obtained from works Engineer, University of Jaffna during office hours

Tenders should be sent to reach Registrar, University of Jafina on or before 1992-12-17 at 10/00 a.m

Tender Board, University of Jaffna reserves the right to reject any tender.

Registrar

University of Jaffna,
P. O. Box 57,
Jaffna. (சி/5512)



## கப்டன் நேசன்

(தியாகலிங்கம் மோகன்பாபு)

பிறப்பு 1973 08. 09

வீரச்சாவு 1992. 06. 08

சின்ன மாவீரா !.....
சித்திரத் தேர் செய்து
சிறுபறையால் தாளமிட்டு
முற்றத்து மணற்பரப்பில்
முந்தை நாள் கோலமிட்டாய்.

அப்பனைக் கொன்று
அன்னையின் பொட்டழித்த
துட்டருக் கெதிராய்
நேற்று, உன்
துப்பாக்கி வெடித்தது.

தாளமிட்டு தேரிழுத்து
நீ பதித்த கோலம்
காலம் எதிர்த்தாலும்
அழிய முடியாதது.

நேசன் இன்று உன்,
சிவப்புக் கைகளால்
நீ வரைந்த ஓவியம்
மணலாற்று மணற்பரப்பின்
வாசனைச் சுவடு
அடிச்சுவடுகளில்
போராட்ட நீரோட்டம்
நாளை பெருக்கெடுக்கும்
ஈழச் சமுத்திரம்.

அலம்பில்
முல்லைத்தீவு

திருமதி தியாகலிங்கம்
குடுப்பத்தினர்

(3681)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்

1. பயிராக்கவியல்/விவசாய உயிரியல் / விவசாய இரசாயனவியல் / விவசாயப் பொறியியல் /மிருக விஞ்ஞானப் பேராசிரியர்.
2. விவசாய உயிரியல் / விவசாய இரசாயனவியல்/ விவசாயப் பொறியியல்/ மிருக விஞ்ஞானத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11 / உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
3. விவசாய உயிரியல்/ விவசாய இரசாயனவியல்/ விவசாய பொறியியல் / மிருக விஞ்ஞானத்தில் தற்காலிக சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1 / தற்காலிக சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11 / தற்காலிக உதவி விரிவுரையாளர்.
4. பயிராக்கவியல்-விவசாய உயிரியல் - விவசாய பொறியியல் - விவசாய பொருளியலில் தற்காலிக செய்முறை காட்டுநர்

**சம்பள அளவுத்திட்டம்.**

பேராசிரியர்:
ரூபா 12,200-6X300-14,000/- (மாதமொன்றுக்கு)

சிரேஷ்ட விரிவுரையாளர்: தரம் 1
ரூபா 9,600/8X250-, 11,600/-(மாதமொன்றுக்கு)

சிரேஷ்ட விரிவுரையாளர்: தரம்II
ரூபா 8000 - 5X250-9250/- (மாதமொன்றுக்கு)

உதவி விரிவுரையாளர்: (தகுதிகாண்)
ரூபா 3900/-மாதமொன்றுக்கு நிலையானது

தற்காலிக சிரேஷ்ட விரிவுரையாளர் தரம்1:
ரூபா 9600/- மாதமொன்றுக்கு (நிலையானது)

தற்காலிக சிரேஷ்ட விரிவுரையாளர் தரம்11:
ரூபா 8000/-மாதமொன்றுக்கு (நிலையானது)

தற்காலிக உதவி விரிவுரையாளர்:
ரூபா 3900/- மாதமொன்றுக்கு (நிலையானது)

துறைத் தலைவரினாலும், பீடாதிபதியினாலும் ஓராண்டு காலத் திருப்திகரமான சேவையை நிறைவு செய்துள்ளாரென உறுதிப் படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒருவருக்கு விரிவுரையாளர் (தகுதிகாண் எனப் பதவிப் பெயர் அளிக்க முடியும் என்பதுடன் துணைவேந்தரால் மாதமொன்றுக்கு 4500-10X200-6500/- சம்பள அளவுத்திட்டத்திலும் வைக்கப்படுவர்.

பேராசிரியர் பதவிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 1993-01-31 ஆகும். ஏனைய பதவிகளுக்கு முடிவுத் திகதி 1992-12-31 ஆகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில், ஒவ்வொன்றுக்கும் ரூபா 20/- செலுத்தி விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

தபால்மூலம் படிவங்களையும் இதர விபரங்களையும் பெற விரும்புபவர்கள் விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் ரூபா 20/- காசுக்கட்டளை/ தபாற்கட்டளையும் 23X10 ச.மீற்றர் அளவுடைய சுய முகவரியிட்டு ரூபா 1/- முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையும் அனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்கத்திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல்வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல்வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் சிறப்பு. தகைமைகளையும்/ அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

பதிவாளர்
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-11-25

(சி-5516)

## நினைவு கூருகின்றோம் ...
## 1992-12-02

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் ஜான் ஓயாப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட

★ றாஜி (லோறன்ஸ் ஆரோக்கியநாதன் - மட்டக்களப்பு)

★ சீலன் (முன்னம்போடிவெட்டை-திருக்கோணமலை)

★ மதுரவால் (நகுலேஸ்வரன் - திருக்கோணமலை)

வவுனியா ஜோசேப் முகாமில் வைத்து சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 36 தமிழ் இளைஞர்கள் - செட்டிகுளம் சேமமடுப் பகுதிகளில் சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன 108 தமிழர்கள்,

சுன்னாகத்தில், சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1985 ஆம் ஆண்டு பட்டிக்குடியிருப்புப் பகுதியில் சிறிலங்காப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

கப்டன் றெஜி (சுப்பிரமணியம் மகேஸ்வரன் - காரைநகர்)

1987 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 40 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு விசுவமடு றெட்பானாப் பகுதியில், இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

கர்ணன் (செல்வநாயகம் மகாதேவன்- புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு)

அம்பாறை - அக்கரைப்பற்றுப் பகுதியில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய-

ஆனந்

சாவகச்சேரியில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட-

நாட்டுப்பற்றாளரான-

தம்பிப்பிள்ளை சிவம்

ஏழாலையில், தேசவிரோதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட குப்பிளான் வாசி உட்பட 2-தமிழ் இளைஞர்கள்.

1990-ம் ஆண்டு அம்பாறை - அறுகம் குடாப்பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

சுனில் (சின்னத்தம்பி அருமைநாயகம் - கோணாவில், அக்கரைப்பற்று- அம்பாறை)

ராஜன் (சேனைக்குடியிருப்பு, கல்முனை - அம்பாறை)

1991-ம் ஆண்டு திருக்கோமணலைப் பகுதியில் பல கிராமங்களை சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைத்துத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் கொல்லப்பட்ட 3- தமிழர்கள்- மற்றும் உயிருடன் எரிக்கப்பட்ட பல தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/5514)

### சிந்தனைக்கு

காக்கையிடம் ஊசி கிடைத்தால் கண்ணிலோ, நெஞ்சிலோ தான் குத்திக்கொள்ளும்.

— திபெத் நாட்டுப் பழமொழி.


# ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம்- 02- 12 1992

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308

த. பெ. எண் - 05


## பாடம் கற்க மறுக்கும் சிறிலங்கா அரசு

சிறிலங்கா இராணுவம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக வகுத்துள்ள போர்முறைத் திட்டங்கள் தோல்வி கண்டுள்ளன. இப்போர் முறைத் திட்டத்தில் இராணுவத்தினருக்கு பாரிய உயிரிழப்பும், தளபாட இழப்பும் ஏற்பட்டுள்ளது. இதற்குப் பதிலாக புதிய போர்முறைத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும், இராணுவத்தினரின் உயிரிழப்பைக் குறைக்க வேண்டும. இவை இன்று சிறிலங்கா இராணுவ வட்டாரங்களிலும். பாதுகாப்பு அமைச்சிலும் தீவிரமாகப் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டுள்ள விடயமாகும்.

இதேவேளை, கடந்த மார்ச் மாதத்தில், கூட்டுப் படை நடவடிக்கை தலைமையகத்திடம் இருந்து அதிகாரங்களை தமக்கு மாற்றித்தந்தால் போரை விரைவில் முடிவுக்குக் கொண்டு வருவோம் என முப்படைகளின் தளபதிகள் கோரியிருந்தார்கள். அதாவது, அதிகாரங்கள் கைமாறினால் போரில் வெற்றி பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. இக் கோரிக்கையும் அரசாங்கத்தினால் ஏற்கப் பட்டது. ஆனால், அதிகாரங்கள் கைமாறின. போரில் வெற்றி கிட்டவில்லை. இதனால், மீண்டும் அதிகாரங்கள் பழையவர்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆனால், போரில் ஏற்படும் தோல்விகளுக்கு தளபதிகளின் அதிகாரங்களை மாற்றுவதாலும், தந்திரங்களை மாற்றுவதாலும் வெற்றி பெற்றுவிடலாம் எனச் சிங்கள அரசாங்கமும், இராணுவத் தரப்பும் கருதுவது மடமைத்தனமானதாகும். இதற்கு சிறிலங்காவின் கடந்தகால வரலாறே போதுமான சான்றாகும்.

தமிழர் தேசிய இனப்பிரச்சினையை இராணுவ ரீதியாக வெற்றி கொள்ள சிறிலங்கா அரசாங்கம் தன்னாலான சகல முயற்சிகளையும் கடந்தகாலத்தில் மேற்கொண்டுள்ளது. அந்நிய நாடுகளிடம்இருந்து இராணுவ உதவிகளைப் பெற்றுள்ளதோடு, புலனாய்வு அறிக்கைகளையும் பெற்றுக் கொண்டுள்ளது. ஆயுதப் போராட்டம் கெரில்லாப் போராட்டமாக வளர்ச்சியடையத் தொடங்கிய போது உலகில் கெரில்லாப் போராட்டத்திற்கு எதிராக தீவிர

## ஹிஸ்புல்லாவை மீண்டும் கட்சியில் சேர்க்க முடிவு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும், முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவருமான எம். எல். ஏ. எம் ஹிஸ்புல்லாவை மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொள்வதெனக் கட்சி முடிவு செய்துள்ளது. கட்சித் தலைமைக்கும் அவருக்குமிடையே அபிப்பிராய பேதங்கள் எழுந்திருந்ததை அடுத்து அவர் கட்சியிலிருந்து ஏன் நீக்கப்படக்கூடாது என்பதற்கு விளக்கம் தருமாறு கட்சித் தலைமை கால அவகாசம் வழங்கி இருந்ததும் தெரிந்ததே.

தற்போது கட்சித் தலைவர் எம். எச். எம். அஷ்ரப்பிடமும் கட்சியிடமும் ஹிஸ்புல்லா மன்னிப்புக் கோரியதை அடுத்து அவர் மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்படலாம் என்று தெரிய வருகிறது.

## பாடசாலை மாணவர்களின் சீருடை வழங்கலில் பாகுபாடு

(வவுனியா)

பாடசாலை மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்கப்படும்போது நாட்டின் ஏனைய பகுதிகளைப் போன்று இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் வசிக்கும் மாணவர்களுக்கு நீல நிறச் சீருடை வழங்கப்படமாட்டாது

இத்தகவலை கல்விராஜாங்க அமைச்சர் திருமதி ராஜமனோகரி புலேந்திரன் வவுனியாவில் நடந்த கருத்தரங்கொன்றில் வைத்து கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் தெரிவித்துள்ளார்.

### ரிச்சர்ட் பத்திரனாவை விலகக் கோரும்

## கையெழுத்துக்கள் குறித்து சிறிமாவோ தீவிர ஆராய்வு

(கொழும்பு)

சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற பிரதம கொறடாவான ரிச்சர்ட் பத்திரனாவை அப்பதவியில் இருந்து அகற்ற வேண்டும் என அக்கட்சியைச் சேர்ந்த 41 எம்பிக்கள் கைச்சாத்திட்டு சபாநாயகருக்கு சமர்ப்பித்துள்ள மகஜரில் உள்ள கையொப்பங்கள் உண்மையானவையா? என்பதைக் கண்டறிவதில் அக்கட்சியின் தலைவி திருமதி பண்டாரநாயக்கா முழு மூச்சாக ஈடுபட்டு வருகின்றார் என கொழும்பில் இருந்து எமக்குக் கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்கா உட்பட 40 பேர் அந்த மகஜரில் கைச்சாத்திட்டுள்ளனர். ஆனால் அந்த மகஜரில் போலி கையொப்பங்கள் உள்ளன என்று திருமதி பண்டாரநாயக்கா குற்றம் சாட்டியுள்ளார். அதே வேளை சுதந்திரக்கட்சித் தலைவி திருமதிபண்டாரநாயக்காவிற்கும், அவரது மகனான கட்சியின் தேசிய அமைப்பாளரான அனுராபண்டாரநாயக்காவிற்கும் ஏற்பட்டுள்ள இழுபறியை முடிவிற்குக் கொண்டுவர கடந்த வெள்ளிக்கிழமை திருமதி பண்டாரநாயக்காவின் இல்லத்தில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இதில் திருமதி பண்டாரநாயக்கா, அனுரா பண்டாரநாயக்கா கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா, சோமசார தஸநாயக்கா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அனுரா பண்டாரநாயக்காவின் வேண்டுகோளிற்கிணங்க கட்சி உபதலைவர் பதவியில் இருந்து அகற்றப்பட்ட ஏ. என் பி. சூரியப்பெருமாவை மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொள்வது குறித்து சட்டத்தரணிகளின் ஆலோசனை பெறுவதாக திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

அதே வேளை களுத்துறை மாவட்ட எம்.பி திலக்கருணாரத்னா பி,பி.சி மற்றும் உள்ளூர் ஆங்கில பத்திரிகைக்கு அளித்த பேட்டி தொடர்பாக மறுப்பு அறிக்கைவிடுத்து மன்னிப்புக் கோரினால் கட்சி தடை வாபஸ் பெறப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சிறிமாவும், அநுராவும் இணக்கம் கண்டுள்ளனர்?

(கொழும்பு)

கட்சிக்குள் பிளவு ஏற்படுவதைத் தடுக்கும் முகமாக சிறிமாவோவும், அநுராவும் ஒருஇணக்கப்பாட்டிற்கு வந்திருப்பதாக கூறப்படுகிறது.

அநுராவின் ஆதரவாளர்களான ஜே. ஆர். பி. சூரியபெருமாவை மத்திய குழுவிலிருந்தும், திலக் கருணாரத்னாவை பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் விலக்குவதற்கு கட்சித் தலைவர் என்ற வகையில் திருமதி சிறிமாவோ மேற்கொண்ட முயற்சியை அடுத்து கட்சிக்குள் மேலும் பிளவு வலுப் பெற்றது.

இதற்குப்பதிலடியாக பாராளுமன்றத்தில் கட்சியின் பிரதம கொறடாவான ரிச்சர்ட் பத்திரனவை அப்பதவியிலிருந்து நீக்கும்படி கோரி கட்சி எம்பிக்கள் சபாநாயகரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

இந் நிலையில் கட்சி விவகாரங்களைக் கவனித்து வந்த மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா தலையிட்டு சிறிமாவோவுக்கும், மகன் அநுராவுக்குமிடையே சமரசம் ஒன்றைத் தோற்றுவித்துள்ளார் என்று தெரிய வருகிறது.

திருமதி சிறிமாவோ, அநுரா மற்றும்சோமசார தசநாயக்க, தர்மசிறி சேனநாயக்க ஆகியோர் இரு மணித்தியாலங்களுக்கும் மேலாக நீடித்த பேச்சு வார்த்தை ஒன்றை நடத்தி இணக்கப்பாட்டிற்கு வந்ததாக கூறப்படுகிறது. இதன் பிரகாரம் கட்சித் தலைவி சிறிமாவோ அரசியலிலிருந்து ஒதுங்க வேண்டும் என்ற கூற்றை திலக் கருணாரத்னா மீளப் பெறுவது என்றும், ஜே, ஆர். பி. சூரியபெருமா தாக்கல் செய்த வழக்கை மீளப் பெறுவது என்றும்,சூரியப்பெருமா, கருணாரத்னா, ரிச்சர்ட் பத்திரனா ஆகியோர் தத்தம் பதவிகளில் நீடிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### 1980 வேலை நிறுத்தம்

## பாதிக்கப்பட்ட ஊழியரின் மனுகவனிக்கப்படுவதில்லை

1980 இல் இடம் பெற்ற அரசாங்க ஊழியர்களின் வேலை நிறுத்தத்தினால் எழுந்துள்ள சகல பிரச்சினைகளையும் தீர்த்து வைக்க வேண்டுமென்ற ஜனாதிபதியின்யோசனையை அமைச்சரவை அங்கீகரித்துள்ள போதிலும், பாதிக்கப்பட்ட ஊழியர்களின் விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட பல திணைக்களங்கள் உரிய படி கவனத்தில் எடுக்காமல் விடுவதாக புகார் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது

1989ஆம் ஆண்டு ஜனாதிபதியின் பிரகடனப்படி நிவாரணத்திற்காக விண்ணப்பித்தும் இதுவரை எந்தப் பதிவிலும் நிவாரணம் கிடைக்கவில்லை என பலர் முறையிட்டுள்ளனர். மேற்படி விண்ணப்பங்கள் ஒவ்வொரு திணைக்களத்திலும் பல மாதங்கள் கவனிப்பாரற்று தேங்கிக் கிடக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் ஆசிரியர்களாக கடமையாற்றி தொழில் இழந்த பலர் நிவாரணத்திற்காக விண்ணப்பித்து மூன்று வருடங்களாகியும் இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என புகார் செய்யப்பட்டுள்ளதாகமேலும்தெரியவருகின்றது

## கெமர்ரூச் பகுதிக்கு வர்த்தகத் தடை விதிப்பு

கம்போடியாவில் கெமர்ரூச் இயக்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகள் மீது ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை வர்த்தகத்தடை விதித்துள்ளது.

இவ் இயக்கத்தை தேசிய நீரோட்டத்திற்குள் கொண்டு வரும் முயற்சியாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று ஐ நா. பாதுகாப்புச்சபை கூறியுள்ளது.

## அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடப்படவில்லை

வவுனியா தமிழ்ப் பிரிவு கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் உள்ள தராசு, படிக்கற்கள், லீற்றர் அளவைகள் யாவும் நீண்ட காலமாக முத்திரையிடப்படவில்லை. இதனால் பாவனையாளர்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது என்று புகார் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா நகருக்கு வெளியே உள்ள தமிழ்ப் பகுதி கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் உள்ள தராசு படிக்கற்கள், லீற்றர் அளவைகளே முத்திரையிடப்படவில்லை.

90 ஆம் ஆண்டிற்குப் பின்னர் லீற்றர் அளவைகள் நெளிந்தும் வளைந்தும் உள்ளன, இதே போலவே தராசு, படிக்கற்கள் ஈயம் கட்டப்படாமல் உள்ளன.

பன்னிரண்டு கிளைகளில் உள்ள நிறுவை அளவைகளுக்கே முத்திரையிடப்படவில்லை என்றும், கூட்டுறவுச் சங்க அதிகாரிகள் இவற்றைக் கவனத்தில் கொள்ளவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

## புதிய பாதை அமைப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்திலிருந்து கொழும்புக்கு விரைவாகச் செல்வதற்கு வசதியாக 29 6 கிலோ மீற்றர் நீளமுடைய புதிய போக்குவரத்துப் பாதை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

## 'கெயர்' உதவி

(யாழ்ப்பாணம்)

நவாலி பகுதி விவசாயிகளுக்கு அமெரிக்க 'கெயர்' ஸ்தாபனம் உர விநியோகம் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது

நவாலி வடக்கைச் சேர்ந்த பதினெட்டு விவசாயிகளுக்கே கிராமிய உற்பத்திக்குழு ஊடாக விரைவில் வழங்கப்பட இருக்கிறது. (05)

## அயோத்தியாவில் திருப்பணி மட்டுமே

## ஜே.வி.பி யினர் 23 பேர் இதுவரையில் தற்கொலை

கைமாறின. போரில் வெற்றி கிட்டவில்லை. இதனால், மீண்டும் அதிகாரங்கள் பழையவர்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆனால், போரில் ஏற்படும் தோல்விகளுக்கு தளபதிகளின் அதிகாரங்களை மாற்றுவதாலும், தந்திரங்களை மாற்றுவதாலும் வெற்றி பெற்றுவிடலாம் எனச் சிங்கள அரசாங்கமும், இராணுவத் தரப்பும் கருதுவது மடமைத் தனமானதாகும். இதற்கு சிறிலங்காவின் கடந்தகால வரலாறே போதுமான சான்றாகும்.

தமிழர் தேசிய இனப்பிரச்சினையை இராணுவ ரீதியாக வெற்றி கொள்ள சிறிலங்கா அரசாங்கம் தன்னாலான சகல முயற்சிகளையும் கடந்தகாலத்தில் மேற்கொண்டுள்ளது. அந்நிய நாடுகளிடமிருந்து இராணுவ உதவிகளைப் பெற்றுள்ளதோடு, புலனாய்வு அறிக்கைகளையும் பெற்றுக் கொண்டுள்ளது. ஆயுதப் போராட்டம் கெரில்லாப் போராட்டமாக வளர்ச்சியடையத் தொடங்கிய போது உலகில் கெரில்லாப் போராட்டத்திற்கு எதிராக தீவிர நடவடிக்கையில் பெயர் பெற்றிருந்த இஸ்ரேலிய உளவுப் படையான மொஸாட்டின் உதவியையும், பயிற்சியையும் சிறிலங்கா இராணுவம் பெற்றது. அதேபோன்று அதிரடித்தாக்குதல்களில் பெயர் பெற்ற பிரிட்டிஷ் கூலிப்படையான எஸ். ஏ. எஸ். அதிகாரிகளிடமும் பயிற்சி பெற்றது,

அதேவேளை அரசாங்கம் இராணுவ அதிகாரிகளுக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தீவிர பயிற்சிக்கு ஏற்பாடு செய்தது. குறிப்பாக பிரிட்டன், பாகிஸ்தான், இந்தியா என்பனவற்றோடு அமெரிக்காவிலும் பயிற்சி பெறப்பட்டது அத்தோடு பெருமளவில் வெளிநாடுகளில் இருந்து இராணுவத் தளபாட உதவிகளையும் பெற்றுக் கொண்டது.

இதற்கும் மேலாக சில வருடங்கள் இந்திய இராணுவத்தின் நேரடி உதவியையும் சிறிலங்கா அரசாங்கம் பெற்றுக்கொண்டது. தற்பொழுது இந்திய கடற்படையுடன் பரஸ்பர உடன்பாடு கொண்டுள்ளதோடு இந்தியப் புலனாய்வுத் துறையுடன் நெருங்கிய தொடர்புகொண்டும் செயற்பட்டு வருகின்றது.

இந்நிலையிலும் தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை சிறிலங்கா இராணுவத்தால் வெற்றி கொள்ள முடியவில்லை. மாறாக விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் இராணுவ மேலிடத்தின் பணிப்புரைகளை களத்தில் உள்ள உயர்அதிகாரிகள் ஏற்காதமிகவும்மோசமான நிலை ஒன்றே உருவாகியுள்ளது. இதேவேளை பணிப்புக்குக் கீழ்ப்படியாத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டால், அவ்உயர் அதிகாரியின் கீழ்பணிபுரிந்த கனிஷ்ட அதிகாரிகள் தாம் பதவி விலகப் போவதாக எச்சரிக்கும் அவல நிலையும் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் தளபதிகளின் அதிகாரங்களை புதியவர்களுக்கு மாற்றுவதினாலோ அன்றி, புதிய போர் யுத்திகளை வகுத்து இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்வதினாலோ இனப்பிரச்சினைக்கு தீர்வுகண்டுவிட முடியாது அதைவிடுத்து பழைய பல்லவியைப் பாடிக்கொண்டு இராணுவ நடவடிக்கையையே அரசு மேற்கொள்ளுமேயானால் இதனால் மேலும் நெருக்கடிகளைச் சந்திக்குமே ஒழிய நன்மை ஏதும் அடைந்துவிடமாட்டாது.

---

கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்கா உட்பட 40 பேர் அந்த மகஜரில் கைச்சாத்திட்டுள்ளனர். ஆனால் அந்த மகஜரில் போலி கையொப்பங்கள் உள்ளன என்று திருமதி பண்டாரநாயக்கா குற்றம் சாட்டியுள்ளார், அதே வேளை சுதந்திரக்கட்சித் தலைவி திருமதிபண்டாரநாயக்காவிற்கும், அவரது மகனான கட்சியின் தேசிய அமைப்பாளரான அனுராபண்டாரநாயக்காவிற்கு இருந்து அகற்றப்பட்ட ஏ. எஸ் பி. சூரியப்பெருமாளை மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொள்வது குறித்து சட்டத்தரணிகளின் ஆலோசனை பெறுவதாக திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

அதே வேளை களுத்துறை மாவட்ட எம்.பி இலக்கருணாரத்ன பி,பி.சி மற்றும் உள்ளூர் ஆங்கில பத்திரிகைக்கு அளித்த பேட்டி தொடர்பாக மறுப்பு அறிக்கைவிடுத்து மன்னிப்புக் கோரினால் கட்சி தடை வாபஸ் பெறப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

## முத்திரையிடப்படவில்லை

வவுனியா தமிழ்ப் பிரிவு கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் உள்ள தராசு, படிக்கற்கள், லீற்றர் அளவைகள் யாவும் நீண்ட காலமாக முத்திரையிடப்படவில்லை. இதனால் பாவனையாளர்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது என்று புகார் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா நகருக்கு வெளியே உள்ள தமிழ்ப் பகுதி கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் உள்ள தராசு படிக்கற்கள், லீற்றர் அளவைகளே முத்திரையிடப்படவில்லை.

90 ஆம் ஆண்டிற்குப் பின்னர் லீற்றர் அளவைகள் நெளிந்தும் வளைந்தும் உள்ளன, இதே போலவே தராசு, படிக்கற்கள் ஈயம் கட்டப்படாமல் உள்ளன.

பன்னிரண்டு கிளைகளில் உள்ள நிறுவை அளவைகளுக்கே முத்திரையிடப்படவில்லை என்றும், கூட்டுறவுச் சங்க அதிகாரிகள் இவற்றைக் கவனத்தில் கொள்ளவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

---

வுள்ளது.

## 'கெயர்' உதவி

(யாழ்ப்பாணம்)

நவாலி பகுதி விவசாயிகளுக்கு அமெரிக்க 'கெயர்' ஸ்தாபனம் உர விநியோகம் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது

நவாலி வடக்கைச் சேர்ந்த பதினெட்டு விவசாயிகளுக்கே கிராமிய உற்பத்திக் குழுவூடாக விரைவில் வழங்கப்பட இருக்கிறது. (05)

---

# அயோத்தியாவில் திருப்பணி மட்டுமே கட்டுமானப்பணி நடக்காது

## —எல். கே. அத்வானி தெரிவிப்பு

(டில்லி)

எதிர்வரும் ஞாயிறன்று அயோத்தியாவில் சமயச்சடங்குகள் மட்டுமே இடம்பெறும் என்றும், கட்டுமானப்பணி எதுவும் இடம்பெறமாட்டாது என்றும் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வானி உறுதிபடக் கூறியுள்ளார்,

நேற்று முன்தினம் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், நீதித்துறையை மதித்து நடக்க தமது கட்சி உறுதி பூண்டிருப்பதாகவும் தெரிவித்தார் எனினும்மக்களின் விருப்பத்தை முறியடிக்க நீதித் துறையை அரசு பயன்படுத்துவதை அனுமதிக்க முடியாது என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை பிரதமர் நரசிம்மராவுடன் தாம் நடத்திய பேச்சுக்கள் பற்றி உத்தரப்பிரதேச முதல்வர் கல்யாண்சிங் திரித்துக் கூறியதாக பாதுகாப்பு அமைச்சர் சரத் பவார் குற்றம் சாட்டியுள்ளார்.

உத்தேச ஆலயத் திருப்பணியை கைவிட்டு உச்சநீதிமன்றத்தின் பரிசீலனைக்கு கொண்டு செல்வதற்கு விஷ்வ ஹிந்து பரிஷத்தை இணங்கச் செய்வதற்கு தமது பதவியைப் பயன்படுத்துமாறு உத்தரப்பிரதேச முதல்வரைத்தான் கேட்டுக்கொண்டதாக சரத்பவார் நேற்று முன்தினம் புதுடில்லியில் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளார்.

## பத்மநாபா கொலை வழக்கு தமிழில் குற்றப்பத்திரிகை

(சென்னை)

பத்மநாபா கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு காவலிலுள்ளவர்களுக்கு தமிழில் குற்றப்பத்திரிகை கொடுக்கப்பட்டது.

இக்கொலை வழக்கின் விசாரணை விசேட நீதிமன்றத்தில் நீதிபதி சவுந்தர பாண்டியன் முன்பாக நடந்தது. பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ள சுப்புலெட்சுமி ஜெகதீசன், வை. ரவிச்சந்திரன். ஆனந்தராஜ். ஞானசெபஸ்தியான், மருகநாயகம், வீரசேகரன் ஆகியோர் கோட்டில் ஆஜராகினர்.

முன்னாள் உள்துறைச் செயலாளர் நாகராஜன் உடல் நிலை சரியில்லை என்பதினால் வக்கீல் மூலம் மனுத் தாக்கல் செய்தார்.

இவ்வழக்கில் கைதாகி சென்னை சேலம் ஜெயில்களில் அடைக்கப்பட்டு உள்ளவர்கள் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

## புதிய கட்சி அமைக்க யெல்ட்சின் கோரிக்கை

(மொஸ்கோ)

புதிய அரசியல் கட்சிஒன்றை அமைக்கும்படி ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்ட்சின் தமது ஆதரவாளர்களை கோரியுள்ளார். மொஸ்கோவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில்; தமது அரசு செய்யும் புரட்சிகர மாற்றங்கள் சமூகத்தில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளதாகவும், அவற்றை தொடர்ந்து முன்னெடுப்பதற்குகந்த வகையில் கட்சி அமைக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை ரஷ்ய ஜனாதிபதி பொருளாதார சீர் திருத்தங்களை முன்னெடுப்பதில் மிக வேகமாகச் செயற்படுவதாக முன்னாள் சோவியத் அதிபர் மிகையில் கொர்பசேவ் கூறியுள்ளார்.

## பொலிஸ் அதிகாரி சுட்டுக்கொலை

(ஹைதராபாத்)

ஆந்திரப் பிரதேச பொலிஸ் திணைக்களத்தின் சுப்பிரிண்டன் ஒருவரும் கான்ஸ்டபிள் ஒருவரும் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாகியுள்ளனர். இச்சம்பவம் பற்றிமேலும் தெரிய வருவதாவது; குற்றப் புலனாய்வு பிரிவுத்துறையின் சுப்பிரிண்டனான கிருஷ்ண பிரசாத்தும், மேலும் மூன்று கான்ஸ்டபிள்களும் இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து ஹைதராபாத நகர்ப்புறமுள்ள வீடொன்றை முற்றுகையிட்டதாகவும், அப்போது வீட்டிலிருந்தவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் சுப்பிரிண்டன் மற்றும் கான்ஸ்டபிள் ஒருவரும் கொல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## ஜே.வி.பி யினர் 23 பேர் இதுவரையில் தற்கொலை

(கொழும்பு)

இரண்டு டசின்களுக்கும் மேற்பட்ட முன்னாள் ஜே வி. பியினர் தற்கொலை செய்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக அதிகார பூர்வ வட்டாரங்கள் கூறியுள்ளன.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தமையல் காதல் முறிந்து போனமை, அல்லது குடும்ப பராமரிப்பிற்காக மனைவிமார் விபசாரத்தில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்பட்டமை போன்றவை இத் தற்கொலைகளுக்கு காரணமாகும்

எனினும் பொலிசாரிடமோ அல்லது அரச நிறுவனங்களிலே பதிவு செய்யப்படாமல் இத்தகைய சம்பவங்கள் மேலும் பல நிகழ்ந்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

தடுப்புக்காவலிலிருந்து விடுவிக்கப்பட்ட 8702 பேரில் 23 பேர் தற்கொலை புரிந்து கொண்டுள்ளனர். இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்களில் 17 பேர் கிரிமினல் குற்றங்களுக்காக மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## சிறுகதைப் போட்டி முடிவுகள் வெளியாகின

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரால் இரசிகமணி கனகசெந்திநாதனின்பதினைந்தாவது நினைவு தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சிறுகதைப்போட்டியின் முடிவுகள் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது

''இரண்டு பிள்ளை ஒன்று தொல்லை'' என்னும் சிறுகதைக்காக கொக்குவிலைச் சேர்ந்த செ. செல்வராசாவிற்கு முதலாம் பரிசும், ''லட்சுமி செய்தது துரோகமா?'' என்னும் சிறுகதைக்காக சுன்னாகத்தைச் சேர்ந்த சபா புஷ்பநாதனுக்கு இரண்டாம் பரிசும், ''சின்முத்திரை'' என்னும் சிறுகதைக்காக சாம்பியாவைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் என்பவருக்கும், ''இல்லாமை நீங்கி எல்லோரும் வாழ'' என்னும் சிறுகதைக்காக அரியாலையைச்சேர்ந்த நடராசா இராமநாதனுக்கும் மூன்றாம் பரிசும் கிடைத்துள்ளது. ''தொலைந்துபோன நாட்கள்'', ''நிழலைத்தேடி'' ''தலைகுனிவு'' என்னும் மூன்று சிறுகதைகளும் ஆறுதல் பரிசுகளை பெற்றுள்ளன.

## வேலைக்கு சென்றோரை இராணுவ ட்ரக் மோதியது

(வவுனியா)

ஜனாதிபதி பிரேமதாச திறந்து வைத்த ஆடைத் தொழிற்சாலைக்கு முதல்நாள் வேலையை மேற்கொள்வதற்காகச் சென்ற இரு இளம் தமிழ்ப் பெண்கள்மீது இராணுவ டிரக் மோதியதில் அவர்கள் கவலைக்கிடமான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மூன்று முறிப்பு பகுதியில் திறந்து வைக்கப்பட்டுள்ள இந்த ஆடைத் தொழிற்சாலையில் ஆரம்பநாள் வேலைக்காக கடந்த 30ஆம் திகதி காலை சைக்கிளில் சென்றவர்களே விபத்திற்குள்ளானார்கள்.

வவுனியா—கண்டி வீதியில் வைத்து நிகழ்ந்த இந்த விபத்தில் காயமடைந்த இரு இளம் பெண்களும் தற்போது கவலைக்கிடமான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று கூறப்பட்டது. (தி)

# ஈழநாதம்

## பட்டதாரி பயிலுநர் பயிற்சி யாழ். இல் நடத்தக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

"பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களுக்கான ஒருவார காலப் பயிற்சி நெறியினை யாழ்ப்பாணத்தில் நடாத்துங்கள் அல்லது இப்பயிற்சி நெறியைப் பிற்போடுங்கள்'' இவ்வாறு யாழ் அரசாங்க அதிபர் கா மாணிக்கவாசக கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

இக் கோரிக்கைகள் அடங்கிய அவசர வானொலிச் செய்தி ஒன்றை அரசஅதிபர் நேற்றுக் காலை கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்தார். இம்மாதம் 17 ஆம் திகதி கொட்டகலையில் மேற்படி பயிற்சி நெறி ஆரம்பமாகவுள்ளது. இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்வதற்கான அனுமதிக்கடிதம் கடந்த வாரமே யாழ்ப்பாணப் பட்டதாரிகளுக்கு கிடைத்தது. இதனால் குறித்த காலத்தில் இவர்கள் மேற்படி பயிற்சி நெறியில் பங்குபற்றுவது சிரமமானது என்று பலர் முறையிட்டதைத் தொடர்ந்தே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது யாழ். மாவட்டத்தில் மட்டும் சுமார் 800 பட்டதாரிகள் மேற்படி பயிற்சி நெறிக்கு தோற்ற வேண்டியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## அமைச்சர் தொண்டமான் பதவி விலக மாட்டாராம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு இணைப்பு விவகாரம் தொடர்பாக அமைச்சரவையிலிருந்து விலகுவது பற்றிய கேள்விக்கு அமைச்சர் தொண்டமான் மறுப்புத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்: பிரேமதாசா தம்மைப் பற்றி நன்கறிவார் என்றும், அமைச்சரவையில் தான் முக்கிய இடத்தை வகித்து வருகிறேன் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் தான் அமைச்சரவையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதியாகவே இடம் பெற்றிருப்பதாகவும் இ. தொ. காவும அரசின் ஒரு அங்கமாக செயற்படுகின்றதேயன்றி தான் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்து விடவில்லை என்றும் தெளிவு படுத்தினார்.

எனது சொந்தக் கருத்துக்கள் வெளியிடப்படுவதற்கு தடை விதிக்கப்படாத வரையில் அமைச்சரவையில் தொடர்ந்து அங்கம் வகிப்பேன் என்றும், வடக்கு. கிழக்கு இணைக்கப்பட்ட நிலையில் தான் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட முடியும் என்பதுவே அரசாங்கத்தில் இணைந்து கொண்டது முதல் தமது நிலைப்பாடாக இருந்து வருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

## யாழ் மாவட்டத்தில் 24,000 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் ஏழாம் திகதி நடைபெறவிருக்கும் க. பொ. த.(சா/தர) பரீட்சைக்கு யாழ் மாவட்டத்தில் சுமார் 24,000 பரீட்சார்த்திகள் வரைதோற்றவுள்ளனர் என யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

மேலும் இப்பரீட்சை யாழ். மாவட்டத்தில் சுமார் 168 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளன. இப்பரீட்சைக்கான வினாத்தாள்கள் கொழும்பில் இருந்து விமானம் மூலம் பலாலிவிமான நிலையத்திற்கு எடுத்துவரப்பட இருப்பதாகவும் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (பா)


- அந்தியேட்டிக்குத் தேவையான (12''x10''Recopy)புகைப்படங்கள்
- நினைவஞ்சலி, கல்வெட்டு, புத்தக அட்டை லேபல்களுக்கு வேண்டிய Line Tone, Colour Blocks
- Photo Polymer(பிளாஸ்ரிக் Blocks)
- றபர் சீல்
- ஓவிய வேலைகள்
- விளம்பர ஸ்ரிக்கேஸ்

தரமாக குறைந்த விலையில் குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள


## அநாதரவான சடலம்

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலுக்கு அருகில் அநாதரவான நிலையில் காணப்பட்ட வயோதிபர் ஒருவரின் சடலம் உரிமை கோரப்படாத நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சுன்னாகம் காவல்துறையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இறந்து கிடந்தவர் மயிலு கந்தையா (வயது 65) என கூறப்படுகிறது இதுவரைஎவரும் இச்சடலத்தை உரிமைகோரவில்லை.

உறவினர்கள் மேற்படி சடலத்தை அடையாளம் கண்டு பொறுப்பேற்குமாறு சுன்னாகம் காவல் பணிமனை பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

## மட்டக்களப்பு நகரில் பொலிசார் மீது சூடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு எல்லேவீதி-பார் வீதிச்சந்தியில் காவல் கடமையில் நின்ற பொலிசார் மீது நடாத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தைத் தொடர்ந்து சுமார் அரைமணி நேரம் துப்பாக்கிச் சமர் நடைபெற்றது.

கடந்த சனிக்கிழமை இரவு 7.30 மணியளவில் நடைபெற்ற இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது சேதம் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது

இச் சம்பவத்தைத் தொடர்ந்து மறுநாள் ஞாயிற்றுக் கிழமை அதிகாலை மட்டக்களப்பு நகரத்தில் திடீர் சுற்றிவளைப்பு, தேடுதல் ஆகியவற்றை பொலிசார் நடாத்தினர்.

வலிகாமம்

வண்ணமிருந்தனர்.

வலி - கிழக்குப் பகுதிகளில் இருந்து இடைக்காடு, அச்சுவேலி, கதிரிப்பாய், வளலாய் ஆகிய பகுதிகளை நோக்கியும், வலி - தெற்கில் இருந்து தெல்லிப்பழை, மல்லாகம், அளவெட்டி, ஏழாலை ஆகிய பகுதிகளை நோக்கியும், வலி மேற்குப் பகுதிகளில் இருந்து இளவாலை, பண்டத்தரிப்பு, சுழிபுரம் ஆகிய பகுதிகளை நோக்கியும் பரவலாக தாக்குதல்களை இராணுவத்தினர் நிகழ்த்தியுள்ளனர். (பா)

## லங்கா சீமெந்து ஊழியர் சம்பளம்

லங்கா சீமெந்து நிறுவன ஊழியர்களுக்கு 1992 ஆம் ஆண்டின் ஐப்பசி, கார்த்திகை மாதங்களுக்கான 25 வீகித சம்பளக் கொடுப்பனவுகள் நேற்றுத் தொடக்கம் சுன்னாகத்தில் உள்ள தற்காலிக காரியாலயத்தில் வைத்து வழங்கப்படுவதாக லங்கா சீமெந்து நிறுவன உதவிப் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

தபால் அதிபர்

டையாள அட்டைக்கான வெற்றுமட்டைகளைக் கொழும்பிலிருந்து பெற எடுத்த முயற்சி போதிய பயன் அளிக்காததால் மாற்று ஏற்பாடாக தபால் அதிபர்கள் மூலம் அத்தாட்சிப்படுத்தப்படும் புகைப்படங்களை ஏற்றுக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.(42)

## விரைந்து வந்த படையினர் சரமாரியாக சுட்டனர்

(வடமராட்சி)

''எனது தம்பியை கடற்படையினர் பிடித்து வைத்து ஏதோ கதைத்துவிட்டு அவரது தொண்டைப்பகுதியை நோக்கிச் சுட்டனர். பின்னர் அவர் மீது சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்''

இவ்வாறு பருத்தித்துறைக் கடலில் நேற்று முன்தினம் சிறிலங்கா கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மொறீஸ் அன்ரன் அருள் நேசராசாவின் சகோதரன் மொறீஸ்-திபூசியால் தெரிவித்தார்.

அக் கொடூர சம்பவம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்; ''நானும் எனது தம்பியும் எமது உறவினர் ஒருவருமாக கடலிற்குச் சென்றிருந்தோம். திடீரென எதிர்ப்பட்ட சிறிலங்கா கடற்படையினர் தொலைவில் வரும் போதே எம்மைநோக்கி சரமாரியான துப்பாக்கிச் சூடு நடாத்திய வண்ணம் நெருங்கினர். நாங்கள் அச்சத்தால் நடுங்கி கைகளையும் கொடியையும் உயர்த்தியவாறு ஒலமிட்டோம். அப்பொழுதும் அவர்கள் சுடுவதை நிறுத்தவில்லை.

கடற்படை படகு எமது படகை நெருங்கியதும் நானும் எமது உறவினரும் கடலில் குதித்துவிட்டோம்கடற்படையினர் எமது தம்பி மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

நாம் கடலில் குதித்து தத்தளித்துக் கொண்டிருந்தபோது எங்களை படகில் ஏறி கரைக்குச் செல்லுமாறு உத்தரவிட்டுவிட்டு கடற்படையினர் விலகிச் சென்றனர்.

நாங்கள் எங்கள் படகில் ஏறிய போது எனது தம்பியின் உடலிலிருந்து இரத்தம் குபீர் குபீர் என பீறிட்டவாறு இருந்தது அவர் இறந்து கிடந்தார், அவரது உடலில் நான்கு குண்டு துளைத்த துவாரங்கள் காணப்பட்டன. எனது தம்பியின் உடலை சுமந்தவாறு கரையை வந்து அடைந்தோம்.

மீனவர் நிவாரணம் கடந்த ஏழு மாதங்களாக கிடைக்கவில்லை. பட்டினியால் வாடும் பிள்ளைகளுக்கு இரை தேடச் சென்று தம்பியின் உயிரை கடற்படையினரின் வேட்டுக்கு இரையாக்கவேண்டி வந்து விட்டது'' என்றார்.

## போருட் உதவி

(வடமராட்சி)

வடமராட்சி போருட் நிறுவனம் செம்பியன்பற்று தனிப்பனை அகதிகள் முகாமில் உள்ள 80 குடும்பங்களுக்கு வெள்ள நிவாரணமாக ஒருவார உலர் உணவை வடமராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உதவியுடன் வழங்கியுள்ளது. இப் பகுதியில் உள்ள சகல முகாம்களுக்கும் 'கியுடெக்' நிறுவனமும் உலர் உணவை வழங்கியுள்ளது.

வட, கிழக்கில் தமது பராமரிப்பில் உள்ள அகதி முகாம்களில் உள்ள விதவைகள் அநாதைகளுக்கும் போருட் நிறுவனம் உலர் உணவு வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து அகதிகளாக தங்கி வரும் 200 குடும்பத்தினருக்கு சமையல் பாத்திரங்களை சிறுவர் பாதுகாப்பு நிதியம் போருட் நிறுவனத்தின் ஊடாக வழங்கியுள்ளது. தலா ஒரு குடும்பத்திற்கு 1200 ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இதே சமயம் வெள்ளத்தினால் பாதிப்புற்று இருக்கும் செம்பியன் பற்று தனிப்பனை அகதி முகாம்களை வட, கிழக்கு பிரதேச செயலரின் அனுசரணையுடன் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை போருட் நிறுவனம் எடுத்து வருகிறது. (யோ)

காவலரண்களின்

இராணுவம் பயன்படுத்தப்பட்டு வருகிறது இவர்களுக்கு பதிலாக பொலிசாரையும், ஊர்காவல் படையினரையும் பயன்படுத்துவது குறித்தும் ஆராயப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

பதிவு

கூற்றுக்களைப் பொலிஸார் நம்பவில்லை எனத் தெரிகிறது.

தேசிய அடையாள அட்டைகளை உடையவர்களாகவும், பொலிஸில் ஏற்கனவேபதிவுசெய்துகொண்டவர்களாகவும் இவர்கள் இருக்கின்றபோதிலும் இவர்களது அடையாளங்கள் தொடர்பாக மீள்பரிசீலனை செய்யப்படுகிறதாம்.

தேசிய

பிரிட்டனின் எம். ஐ. 5. இஸ்ரேலின் மொசாட் அமைப்புக்கள் போன்ற செயற்பாட்டை

## நிர்வாகசபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்க பணியாளர்களின் சிக்கன கடனுதவிச் சங்க புதிய வருட நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது

பின்வருவோர் நடப்பு வருடத்திற்கான நிர்வாக சபை உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். தலைவர் கி. சண்முகம், உப தலைவர் க. சந்திரலிங்கம், செயலாளர் வ. திருஞானசம்பந்தர் பொருளாளர் இ விஜய மேகனராஜ் மேலும் நிர்வாகிகளாக 5 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## பொருள்கள் இறக்குதல் தடை

(வடமராட்சி)

கடலில் ஏற்பட்ட பலத்த காற்று, கடல் கொந்தளிப்பினால் இன்று பருத்தித்துறை இறங்கு துறையில் கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் தடைப்பட்டன. (யோ)

## இடமாற்றம்

காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலயமும், கிராமிய வங்கியும் தற்போது இல 356 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் (மசூதிக்கு முன்பாக) எனும் இடத்தில் உள்ள கட்டடதில் இயங்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (17)

கிளாலி

மற்றும் 32 துவிச்சக்கர வண்டிச்சட்டங்கள் மீட்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இப்படகில் இருந்த அனைவரும் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை இச்செய்திகள்

## தமிழீழ காவல்துறை

பரீட்சார்த்திகள் வரைதோற்ற வுள்ளனர் என யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

மேலும் இப்பரீட்சை யாழ்.

மயில் இருந்து விமானம் மூலம் பலாலிவிமான நிலையத்திற்கு எடுத்துவரப்பட இருப்பதாக வும் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (பா)

தாவு காணப்பட முடியும் என் பதுவே அரசாங்கத்தில் இணைந்து கொண்டது முதல் தமது நிலைப்பாடாக இருந்து வருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

## லங்கா சீமெந்து ஊழியர் சம்பளம்

லங்கா சீமெந்து நிறுவன ஊழியர்களுக்கு 1992 ஆம் ஆண்டின் ஐப்பசி, கார்த்திகை மாதங்களுக்கான 25 விகித சம்பளக் கொடுப்பனவுகள் நேற்றுத் தொடக்கம் சுன்னாகத்தில் உள்ள தற்காலிக காரியாலயத்தில் வைத்து வழங்கப் படுவதாக லங்கா சீமெந்து நிறுவன உதவிப் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

வலி - தெற்கில் இருந்து தெல்லிப்பழை, மல்லாகம், அளவெட்டி, ஏழாலை ஆகிய பகுதிகளை நோக்கியும், வலி மேற்குப் பகுதிகளில் இருந்து இளவாலை, பண்டத்தரிப்பு, சுழிபுரம் ஆகிய பகுதிகளை நோக்கியும் பரவலாக தாக்குதல்களை இராணுவத்தினர் நிகழ்த்தியுள்ளனர். (பா)

## தபால் அதியர்

டையாள அட்டைக்கான வெற்றுமட்டைகளைக் கொழும்பிலிருந்து பெற எடுத்த முயற்சி போதிய பயன் அளிக்காததால் மாற்று ஏற்பாடாக தபால் அதிபர்கள் மூலம் அத்தாட்சிப்படுத்தப்படும் புகைப்படங்களை ஏற்றுக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.(42)

னம் உலர் உணவு வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து அகதிகளாக தங்கி வரும் 200 குடும்பத்தினருக்கு சமையல் பாத்திரங்களை சிறுவர் பாதுகாப்பு நிதியம் போரூட் நிறுவனத்தின் ஊடாக வழங்கியுள்ளது. தலா ஒரு குடும்பத்திற்கு 1200 ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இதே சமயம் வெள்ளத்தினால் பாதிப்புற்று இருக்கும் செம்பியன் பற்று தனிப்பனை அகதி முகாம்களை வட, கிழக்கு பிரதேச செயலரின் அனுசரணையுடன் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை போரூட் நிறுவனம் எடுத்து வருகிறது. (யோ)

பட்டு வருகிறது இவர்களுக்கு பதிலாக பொலிசாரையும், ஊர்காவல் படையினரையும் பயன்படுத்துவது குறித்தும் ஆராயப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

## பதிவு

கூற்றுக்களைப் பொலிஸார் நம்பவில்லை எனத் தெரிகிறது.

தேசிய அடையாள அட்டைகளை உடையவர்களாகவும், பொலிஸில் ஏற்கனவேபதிவுசெய்துகொண்டவர்களாகவும் இவர்கள் இருக்கின்றபோதிலும் இவர்களது அடையாளங்கள் தொடர்பாக மீள்பரிசீலனை செய்யப்படுகிறதாம்.

## தேசிய

பிரிட்டனின் எம். ஐ. 5, இஸ்ரேலின் மொசாட் அமைப்புக்கள் போன்ற செயற்பாட்டை தேசிய புலனாய்வுப்பணியகமும் மேற்கொள்ளவுள்ளது.

இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் தடைப்பட்டன. (யோ)

## இடமாற்றம்

காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலயமும், கிராமிய வங்கியும் தற்போது இல 356 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் (மசூதிக்கு முன்பாக) எனும் இடத்தில் உள்ள கட்டடதில் இயங்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (17)

## கிளாலி

மற்றும் 32 துவிச்சக்கர வண்டிச்சட்டங்கள் மீட்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இப்படகில் இருந்த அனைவரும் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை இச்செய்திகள் குறித்து ஊர்ஜிதமான தகவல் எதுவும் கிடைக்கவில்லை,


✻ அந்தியேட்டிக்குத் தேவையான (12''x10''Recopy)புகைப்படங்கள்

✻ நினைவஞ்சலி, கல்வெட்டு, புத்தக அட்டை லேபல்களுக்கு வேண்டிய Line Tone, Colour Blocks

✻ Photo Polymer(பிளாஸ்ரிக் Blocks)

✻ றபர் சீல்

✻ ஓவிய வேலைகள்

✻ விளம்பர ஸ்ரிக்கேஸ்

தரமாக குறைந்த விலையில் குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள

**கொழும்பு ஸ்ருடியோ**

**55, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.**

(சி-5518)



# தமிழீழ காவல்துறை

# பதவி வெற்றிடம்

**(1) சாரதி:** (வாகனம் ஓட்டுநர்கள்)
இலேசான, பாரமான வாகனங்கள்

**கல்வித்தகைமை** - 8-ம் வகுப்பு சித்தி

**வயது:** 18 - 30 வரை **உயரம்:** 5' - 5' 6''வரை

திருமணமாகாதவர் மட்டும். சாரதி வேலையில் குறைந்தது 5 வருட அனுபவமுள்ளவர்களும் அத்தாட்சிப் பத்திரங்களுடன் நாவலர் வீதியிலுள்ள தமிழீழ காவல்துறையின் தலைமைச் செயலகத்திற்கு 10.12.92 வரை சமுகந்தரவும்.

**(2) உப பரிசோதகர் / காவலர் தரங்கள்**

**தகைமைகள்:** 8-ம் வகுப்பு தொடக்கம்
க. பொ. த. (உயர்தரம் வரை)

**உயரம்:** 5' - 5' 6'' **வயது:** 18 - 30 வரை.

மேற்கூறிய தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 10-12 92 வரை நாவலர் வீதியிலுள்ள தமிழீழ காவல்துறையின் அலுவலகத்திற்கு சமுகந்தரவும். தபால் மூலம் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஆண் / பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்

பா. நடேசன்
பொறுப்பாளர்
தமிழீழ காவல்துறை

(சி-5520)



UNIVERSAL
FOR GOD AND COUNTRY

**யூனிவேர்சல்**

கந்தர்மடம்—யாழ்ப்பாணம்

# புதிய வகுப்புக்கள்

**(ஆண்டுகள் 5,6,7,8,9,10,11)**

யாவும்

**05-12-92**

**[சனிக்கிழமை]**

**பி. ப. 3 மணி**

(சி-5521)



## எடிசன் அக்கடமி

(யாழ் இந்துக்கல்லூரி அருகில்)

411/1, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**கல்வி ஆண்டு 1993**

**ஆண்டு 4 முதல் O/L வரை**

★ சனி, ஞாயிறு வகுப்பு
★ மாலை வகுப்பு

**ஆரம்பம்:**

**06-12-92 ஞாயிறு காலை 9 மணி**

| | |
|---|---|
| கணிதம் | - பாஸ்கரன், M சிறிதரன், M. தனபாலன் |
| விஞ்ஞானம் | - J.R. சூரி, J J. கொலின்ஸ், S P. சோதி |
| ச. கல்வி | - K. S. முத்துலிங்கம் |
| தமிழ் | - தங்கவேல், குழந்தைவேலு |
| ஆங்கிலம் | - மனோரஞ்சன், இராசலிங்கம் |
| வர்த்தகம் | - விக்கி |

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

(சி- 5519)


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**01.12.92**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்;- 6889

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-8515, 24-7225, 27-7993, 24-8432, 24-6161, 26-8936.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-8283, 26-6320, 22-5857, 22-7271, 28-0854, 26-4376 41-0534, 26-2585, 24-3594, 42-7312, 26-0535, 40-1516, 28-4381, 42-1182, 27-5775, 26-8419, 24-4491, 27-2088, 24-4361, 24-9489, 24-6499.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.